கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 134/2020

வாதி தரப்பு சாட்சி -2 திருமதி.சுகப்பிரியா திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 05.04.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**6,7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை விசாரணை**

வாதி குடும்பத்தை பற்றி தனிப்பட்ட முறையில் எனக்கு தெரியாது. சா.சா-ஆ.1 ஆவணத்தில் மொட்டை கவுண்டர் என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த மொட்டை கவுண்டர் வாதி தகப்பனார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.53 ற்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ-1 ஆவணத்தில் சர்வே எண்.77/1 சம்மந்தமாக மொட்டைய கவுண்டர் மற்றும் நான்கு நபர்களின் பெயர்கள் உள்ளது. சர்வே எண்.77/2 ல் பொ.மொட்டைய கவுண்டர் என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.74/10 லும் பொ.மொட்டைய கவுண்டர் என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 134/2020

வாதி தரப்பு சாட்சி -3 விஜேயேந்திரன் திருமதி. திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 05.04.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜேயேந்திரன் | கிராமம் | தழிஞ்சி |
| த/பெ | | தொழில் | கிராம நிர்வாக அலுவலர் |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | |

**வா.சா. 3 - விஜேயேந்திரன் - முதல் விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் வாதியின் தந்தை மொட்டையன் என்பவர் பெயரில் உள்ளதா என்றால் 12 எண்கள் வாதியின் தந்தை பெயரில் உள்ளது. அவை சர்வே எண். 77/2, 79/2A, 76/1, 74/10, 40/7, 73/9, 72/11, 72/17, 44/13, 60/2A, 60/2B, 44/7 ஆகியவை UDR திட்டத்திற்கு முன்பு பட்டா எண்.44 ல் உள்ளது. மேற் சொன்ன சர்வே எண்களில் உள்ள நிலங்களுக்கு வாதியின் தந்தை பெயரில் தான் சிட்டா உள்ளது. UDR க்கு பின்பு பட்டா எண்.341 ல் சில சர்வே எண்கள் வாதியின் தந்தை பெயரில் உள்ளது. அவை சர்வே எண்.77/2, 79/2,76/1, 74/10, 60/2A. மேற்படி சர்வே எண்களை தவிர மற்ற சர்வே எண்களுக்கு UDR ல் வெவ்வேறு நபர்களின் பெயரில் பட்டா ஏற்பட்டடுள்ளது.

2. 6, 7 பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டா விவரம் பொன்னம்பலம் மக்கள் ராசு, சின்னு ஆகியோர் பெயரில் பட்டா எண்.525 UDR ன் போது ஏற்பட்டது. அதன் சர்வே எண்கள்.73/9, 72/11, 72/17. பொன்னம்பலம் மக்கள் ராசு, கன்னு ஆகியோர் பெயரில் பட்டா எண்.458 UDR ன் போது ஏற்பட்டது. அதன் சர்வே எண்கள்.44/13, 43/2, ஆகும். சர்வே எண்.40/7 ஆனது ஆறு நபர்களின் பெயரில் கூட்டு பட்டாவாக பட்டா எண் 673 ஆக உள்ளது. வாதி பொன்னுசாமி மேற்படி 12 அயிட்ட சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறாரா என்றால் சில சர்வே எண்களில் உள்ள சொத்துக்களை மட்டும் அனுபவம் செய்து வருகிறார். அவை சர்வே எண்கள்.77/2, 79/2A, 76/1, 74/10 ஆகும். சர்வே எண்.77/2 ற்கு பட்டா எண்.1345 ஆனது மொட்டையன் கவுண்டர் மகன் பொன்னுசாமி பெயரில் உள்ளது.

3. சர்வே எண்.79/2A ற்கு பட்டா எண்.341 ஆனது ராசு கவுண்டர் மகன் பொன்னுசாமி பெயரில் உள்ளது. ஆனால் அதன் அனுபவம் வாதி பொன்னுசாமி வசம் உள்ளது. சர்வே எண்.76/1 மற்றும் 74/10 ற்கு பட்டா எண்.341 ஆனது ராசு கவுண்டர் மகன் பொன்னுசாமி பெயரில் உள்ளது. ஆனால் அதன் அனுபவம் வாதி பொன்னுசாமி வசம் உள்ளது. மேற்படி நான்கு சர்வே எண்களுக்கும் பட்டா மாறுதல் உத்தரவு உள்ளதா என்றால் இல்லை. அந்த பட்டா மாறுதுல் உத்தரவு எண்.SK1787 நாள்.09.03.1994. மேற்படி உத்தரவின் படி தான் மேற்சொன்ன நான்கு சர்வே எண்களுக்கும் பட்டா மாறுதல் செய்யப்பட்டது. பொதுவாக பட்டா மாறுதல் செய்யும் போது பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் பெயரிலோ அல்லது வாரிசு உரிமை அடிப்படையிலோ பட்டா மாறுதல் செய்யப்படும் என்றால் சரிதான்.

4. ஒரு பட்டா மாறுதல் செய்யும் போது பட்டா மாறுதலுக்கான உத்தரவின் பேரில் தான் பட்டா மாறுதல் செய்வோம். ஆனால் அது எந்த வகைபாட்டின் அடிப்டையில் மாற்றம் செய்யப்பட்டது என்று குறிப்பிட மாட்டோம். 10-1 சிட்டாவில் பட்டா மாறுதல் உத்தரவின் பேரில் பட்டா மாற்றம் செய்யப்படுகிறது என்று மட்டுமே குறிப்பிடப்படும். வருவாய் துறையில் பட்டா மாறுதலுக்கான உத்தரவுகள் அனைத்தும் கோப்பில் இருக்கும். மேற் சொன்ன பட்டா மாறுதல் உத்தரவு வருவாய் துறையில் அலுவலகத்தில் கிடைக்கப்பெறாதா நிலையில் காவல் துறையில் புகார் ஏதும் அளிக்கவில்லை. தற்போது தான் மேற்சொன்ன பட்டா மாறுதல் உத்தரவு காணாமல் போனது கண்டறியப்பட்டது.

5. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் ஏதேனும் மனுக்கள் வந்தால் அவற்றை நாங்கள் கையாளுவதில்லை. மேற்படி பட்டா மாறுதல் உத்தரவு பதிவறையில் தேடிப்பார்த்ததில் கிடைக்கபெறவில்லை என்று பதிவறை எழுத்தர் சமர்பித்த கடிதத்தின் பேரில் நான் அவ்வாறு கூறியுள்ளேன். அந்த கடிதம் **சா.சா.ஆ 2** ஆக **(பிரதிவாதிகள் தரப்பில் தேதி, சீல் ஆகியவை இல்லை என்றும், உயிருடன் இருக்கும் நபர் கொடுத்த சான்றாவணமாக இருப்பதால் அதை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று ஆட்சேபனை செய்யப்பட்டது )** எனவே ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. எந்த வருடத்திலிருந்து மேற்படி பதிவறை எழுத்தாளர் அலுவலகத்தில் கோப்புகள் பராமரிக்கப்பட்டு வருகிறது என்று எனக்கு தெரியாது. அதை பற்றி பதிவறை எழுத்தருக்கு தான் தெரியும். ஒரே சமயத்தில் ஒரே பட்டா எண்ணில் தனித்தனி இரண்டு நபர்களுக்கு பட்டா ஏற்படாது.

<u>6, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனக்கு வந்த அழைப்பாணையில் சர்வே எண்கள்.77/2, 79/2A, 76/1, 74/10 ஆகியவற்றின் சம்மந்தமாக அனுபவம் செய்வதாக சொல்லப்படும் நபரிடமிருந்து எனக்கு

மனு ஏதும் வந்ததா என்றால் இல்லை. மேற்படி நான்கு சர்வே எண்களில் வாதி அனுபவம் செய்வதாக நான் சொல்வது அரசு ஆவணத்தின் அடிப்படையில் அல்ல. அடங்கல் ஆவணத்தை வைத்து யார் அனுபவம் செய்கிறார் என்று சொல்ல முடியாது. DK என்பது Direct Kosam. SK1787 ஆவணம் தாலுகா அலுவலகத்தில் உள்ளது. வாதி தான் மொட்டையன் கவுண்டரின் வாரிசு என்று வாரிசு சான்றிதழ் எனது அலுவலகத்தில் உள்ளதா என்றால் இல்லை. சா.சா-ஆ.2 ஆனது தேதி மற்றும் சீல் ஆகியவை இல்லை என்றும், ஒரு தனிநபர் உயிருடன் இருக்கும் சமயத்தில் வழங்கப்பட்ட ஆவணமாக இருப்பதால் அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

Taken down by me in the open court, read over and interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**